தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-5-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அரசு திட்டங்களின் சமூக பொருளாதார தாக்கத்தை சமூக விஞ்ஞானிகள் ஆராய வேண்டும்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், நடைபெறும் சமூக-பொருளாதார ஆய்வுத்திட்டங்களின் நடப்பு நிலை குறித்து பல்கலை துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, சமூகத்தில் நிலவும் சமகால பிரச்சனைகளான, இளைஞர்களுக்கு வேளாண்மை மீதான ஆர்வத்தை ஏற்படுத்துதல் அரசின் வேளாண் சார்ந்த திட்டங்கள் மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், நாடு திரும்பிய கணிப்பொறி வல்லுநர்களின் வேளாண் ஆர்வம் போன்றவற்றின் மீது போதிய கவனம் சேலுத்த வேண்டும் என்றார்.

ஒருங்கிணைந்த வேளாண் பண்ணைத்திட்ட மாதிரி இலாபகரமானது என ஆய்வுப்பூர்வமாக நிரூபிக்கப்படும் பட்சத்தில், அதே போல், மாதிரி பண்ணைகளை மாவட்டம் தோறும் உருவாக்க உறுதுணை செய்யலாம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், ஒவ்வொரு சமூக விஞ்ஞானிகளும் மக்களுக்கு பயன்தரக்கூடிய ஏதேனும் ஒரு ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

முன்னதாக வேளாண் ஊரக மேம்பாட்டு மைய இயக்குநர் முனைவர் சின்னத்துரை அவர்கள் வரவேற்புரையாற்றினார். வேளாண் விரிவாக்க இயக்குநர் முனைவர் H. பிலிப் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்